
ISSN - 2235-9796

20 பக்கங்கள் : விலை 30/-

Valai
# வலை
சமகால பொது அறிவுத் தொகுப்பு

சிலந்தி - 05 யூன் - 2016 இழை - 57


உண்மை
நேர்மை
நம்பிக்கையே
உயர்ச்சி தரும்



கபாலி (15)




தேர்தல் (18)



குத்துச்சண்டை அலி (10)

**வாசக நெஞ்சங்களுக்கு...!**

வலையின் இதழ் 57 ஆவது இழையில் உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எப்படி சௌக்கியமாக இருக்கிறீர்களா?

ஒரு சமூகம் செய்யவேண்டிய பணியைத் தனிமனிதராக முன்னெடுத்து எமது எழுத்துச் செல்வங்கள் பல அழிந்துவிடாமற் காப்பாற்றியவர் குரும்பசிட்டி இரா.கனகரத்தினம் அவர்கள்.

அவர் இன்று மறைந்துவிட்டார். மிகப்பெரும் பணியை தனியொருவராக செய்த இரா.கனகரத்தினத்தின் மறைவு, தமிழ் உலகிற்கு பேரிழப்பு என்றே சொல்ல வேண்டும்.

தமிழ் இலக்கியம், தமிழர் பண்பாடு தமிழரின் கல்வி போன்ற இன்னோரன்ன துறைகளில் பணியாற்றி வந்த வருகின்ற ஏராளமான தமிழர்களை இனங்காண முடியும். ஆயினும், குரும்பசிட்டி இரா.கனகரத்தினம் அவர்கள் கடந்த 45 ஆண்டுகளாக ஆற்றிய அரிய தமிழ்ப் பணிக்கு ஈடு இணையில்லை என்றே கூறவிடலாம்.

இலங்கை வாழ் தமிழர்கள் என்றில்லாது உலகளாவிய தமிழர்களின் வரலாற்றுப் பதிவுகளை நூற்றுக்கும் மேற்பட்ட ஆண்டுகள் பழமைவாய்ந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பனவற்றிலிருந்து இனங்கண்டு அவற்றைத் தரம் பிரித்து சேகரித்து ஒரு தமிழர் ஆவணக் களஞ்சியத்தையே உருவாக்கியுள்ள பெருமை கனகரத்தினத்தைச் சேரும்.

உண்மையில், ஒரு நிறுவனம் செய்ய வேண்டிய பணியைத் தனிமனிதனாக நின்று கனகரத்தினம் செய்து வந்தமை பாராரட்டுக்குரியது. தமிழினத்தின் இந்த வரலாற்றுத் தேவையை உணர்ந்து உலகத் தமிழர் ஆவணக் காப்பகம் ஒன்றின் அவசியத்தை வலியுறுத்தி வந்துள்ளார்.

“ஆவண ஞானி“ என்று அவருக்கு புலம்பெயர் தமிழர்களால் வழங்கப்பட்டுள்ள பட்டம் பொருத்தமானதே!. இந்த இதழ் தொடர்ந்து வெளிவருவது உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது.


எனவே உங்கள் ஆதரவில் எனது பணி தொடரும்...

நன்றி.

- ‘வலை’ வீசல் தொடரும்...

சி.என்.எச்.சாள்ஸ்
தொகுப்பாசிரியர்

## இம்மாத சர்வதேச தினங்கள்...




- ✧ யூன் - 01- உலக பால்மா தினம்
- ✧ யூன் - 05- உலக சூழல் தினம்
  2016 தொனிப்பொருள் : "வாழ்வுக்காக வனம்"
- ✧ யூன் - 17- உலக விதவைகள் தினம்
- ✧ யூன் - 10- உலக தராதர அங்கீகார தினம்
- ✧ யூன் - 20- உலக அகதிகள் தினம்
- ✧ யூன் - 21- உலக யோகா தினம்
- ✧ யூன் - 23- இலங்கையில் தேசிய வீடமைப்பு தினம்

## இலங்கை பற்றிய இம்மாத வலை வீசலில்...

❒ இன்னும் 10 ஆண்டுகளில் யாழ்ப்பாணம் குட்டித் தீவாக மாற்றமடையும் எனக் கூறிய ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முன்னாள் உப வேந்தர் யார்?
**கலாநிதி செனவி ஏபிடவத்த**
*10 வருடங்களுக்குள் கடல் மட்டம் ஒரு மீற்றர் வரை உயரக்கூடும் எனக் கூறப்படுகிறது.*

❒ தற்கொலை அதிகம் நடக்கும் நாடுகளின் பட்டியலில் இலங்கை தற்போது எத்தனையாம் இடத்தில் உள்ளது?
**4 ஆவது.**

❒ தன்னியக்க நீர் இறைக்கும் பொறிமுறை மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மலசல கூட வசதி போன்ற இரு கண்டுபிடிப்புக்களைச் செய்து சாதனை படைத்த இளம் கண்டுபிடிப்பாளர் யார்?
**என்.என்.ஜாக்சன் (வயது-31) (வவுனியா)**

❒ முகநூலின் மூலம் 10 இலட்சம் பேர் விருப்பம் தெரிவித்த இலங்கையின் அரசியல்வாதி யார்?
**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன**

❒ சீனாவிடமிருந்து அண்மையில் இலங்கை வாங்கிய கப்பலின் பெயர் என்ன? **"எம்லி சிலோன் பிரின்சஸ்"**

- ❒ படையினரின் மூன்றாவது குழந்தைக்கு வழங்கப்படும் கொடுப்பனவு தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. அந்தக் கொடுப்பனவு எவ்வளவு தொகை?
  **ஒரு இலட்சம்**

- ❒ இலங்கை கிரிக்கெட் சபை தனது 19 ஆவது பிரிவு அணிக்குத் தெரிவு செய்யப்பட்ட இரண்டு தமிழ் வீரர்கள் யார்?
  **எஸ்.ஜெனிபிளமிங், கே.கபில்ராஜ்**
  **(சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்)**

- ❒ அபாயகரமான போதைப்பொருள் கட்டுப்பாட்டுச் சபையின் அறிக்கையின்படி இலங்கையில் எத்தனையாயிரம் பேர் ஹெரோயின் பாவனையாளர்களாக உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது?
  **50 ஆயிரம் பேர்**

- ❒ இலங்கையில் மதுப்பாவனை மூலமாக அதிக வருமானத்தைப் பெற்று முதலிடத்தில் உள்ள மாவட்டம் எது?
  **யாழ்ப்பாணம்**

- ❒ எந்த நாட்டுக்கான விமான சேவை நிறுத்தப்படவுள்ளதாக சிறிலங்கன் விமான சேவை அறிவித்துள்ளது?
  **ஜேர்மனியின் பிராங்போர்ட்**
  **பிரான்சின் பரிஸ் நகரம்**

- ❒ இலங்கையில் எத்தனை வீதமானோர் புகைக்கும் பழக்கமுடையவர்களாக உள்ளனர் என ஆய்வு கூறுகிறது?
  **23.4 வீதம்**

- ❒ இலங்கையில் புகைத்தல் மற்றும் மதுபானம் தொடர்பான நோய்களுக்காக தினமும் எத்தனை கோடி ரூபாவினை அரசு செலவு செய்வதாகக் கூறியுள்ளது?
  **50 கோடி**

- ❒ ஆசியாவின் அழகான 50 இடங்களின் பட்டியலில் இடம்பிடித்துள்ள இந்தியா வின் பிரபலமான இடம் எது?
  **தாஜ்மஹால்**

- ❒ இலங்கை அரசாங்கத்தின் அபிபிருத்தி செயற்றிட்டங்களுக்கு 44 பில்லியன் யென்களை வழங்கியுள்ள நாடு எது? **ஜப்பான்**

//////////////////////////////////////////////////////////////////////

❒ சமுர்த்தி திவிநெகும வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நச்சுத் தன்மையற்ற உற்பத்தியில் பிரதான இடத்தை வகிப்பவை எவை?
**கீரை வகைகள் மற்றும் கிழங்கு வகைகள்**

❒ அண்மையில் (05.06.2016) இலங்கையில் எப்பகுதி இராணுவ முகாம் ஆயுதங் கிடங்கில் பாரிய தீ விபத்து ஏற்பட்டு ஒரு இராணுவ வீரர் பலியாகிய சம்பவம் எங்கு நடைபெற்றது?
**கொஸ்கம - சலாவ இராணுவ முகாம்**

❒ கொஸ்கம வெடி விபத்துச் சம்பவத்தைத் தொடர்ந்து எத்தனை மணித்தியாலத்துக்கு ஒரு தடவை "வளி" சோதனை செய்யப்பட்டு வருகிறது?
**3 மணி நேரம்**

❒ இலங்கை லேக்ஹவுஸ் நிறுவனம் ஊடக மேம்படுத்தலுக்காக சீன நாட்டின் எந்த செய்தி முகவர் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டது?
**"சின்ஹுவா" செய்தி முகவர் நிறுவனம்**

❒ நாட்டு மக்களின் போஷாக்குத் தரத்தை மேம்படுத்தும் வகையில் தேசிய போஷாக்கு மாதம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவினால் எப்போது ஆரம்பித்து வைக்கப்பட்டது?
**2016 யூன் மாதம்**

❒ இலங்கையில் குரக்கன் சுத்திகரிப்பு இயந்திரத்தைக் கண்டுபிடித்த தொழில் நுட்ப நிறுவனம் எது?
**அநுராபுரம் தொழில்நுட்ப நிறுவனம்**

❒ இலங்கையின் 2016 ஆம் ஆண்டுக்கான பொருளாதார மாநாடு எங்கே நடைபெறவுள்ளது?
**கொழும்பில்**
**"அவதானி செயற்படு, விநியோகி"**
**எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளது. இதுவரை திகதி அறிவிக்கப் படவில்லை.**

❒ நீண்ட ஆயுளைக் கொண்ட 84 ஆயிரம் மரங்களை நடும் நாடு தழுவிய ரீதியிலான திட்டத்தை ஆரம்பித்துள்ள நிறுவனம் எது?
**"ரீபொரஸ்ட்"**

❒ இலங்கையின் பொகவந்தலாவை, கொட்டியாகலையைச் சேர்ந்தவரும், தொடர்ந்து 24 மணி நேரம் நடனமாடிச் சாதனை நிலைநாட்டிய இளைஞர் யார்?
**தயாபரன்**

❒ உலக வங்கியின் கல்வி அபிவிருத்திக் குழு அண்மையில் இலங்கையின் எப்பகுதிக்கு விஜயம் செய்தது?
**திருக்கோவில் வலயப் பாடசாலைகளுக்கு**

❒ டெங்கு நோய் புதிய வடிவம் எடுத்திருப்பதாகக் கூறிய பேராதனை பல் கலைக்கழக விரிவுரையாளர் யார்?
**உதய ரலபனாவ**

❒ மென்பானங்களிலுள்ள சீனியின் அளவுகளை வர்ணங்கள் மூலம் அடை யாளம் காணும் பொருட்டு அண்மையில் அரசினால் வர்தமானி வெளியிடப் பட்டது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் என்ன?
**11 கிராமிற்கு அதிகம் - சிவப்பு**
**2-11 கிராமிற்கு உள்ளே - மஞ்சள்**
**2 கிராமிற்கு குறைவு - பச்சை**
மேற்படி நடைமுறை 2016 ஓகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

❒ 2015 இல் போதைப்பொருள் குற்றத்திற்காக நாட்டில் எத்தனை பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
**67 ஆயிரம் பேருக்கு அதிகமானோர்**

❒ கடந்த 22 வருடங்களாக தங்கள் உயிரைப் பணயம் வைத்து தேசத்தை ஒன்றிணைத்த படை வீரர்களுக்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜயவர்த்தனவின் எண்ணக்கருவில் உருவான தேசத்தின் அபிமா னத்தை கட்டியெழுப்பும் நிகழ்ச்சியின் பெயர் என்ன?
**"விருசர" சிறப்புரிமை**

❒ சிங்கப்பூர் வர்த்தக மற்றும் முதலீட்டு அமைச்சர் அண்மையில் (31.06.2016) இலங்கை வந்து சென்றார். அந்த அமைச்சர் யார்? **எஸ்.ஈஸ்வரன்**

❒ புத்தளம் மாவட்டத்தில் எத்தனை தொழுநோயாளர்கள் இனங்காணப்பட்டுள் ளனர்? 118 பேர்

- ❒ அண்மையில் கொழும்பில் நடைபெற்ற உலக சமுத்திர தினத்தின் தொனிப் பொருள் என்ன?
  **“ஆரோக்கியமான சமுத்திரம் ஆரோக்கியமான புவி”**

- ❒ சமூகத்திற்கு உயர் சேவையாற்றிய கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு என்ன பதவிகளை நீதியமைச்சு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது?
  **சமாதான நீதவான்கள்**

- ❒ பல்கலைக்கழக மாணவர்களுக்கு மடிக் கணினிகளை வழங்குவதற்கு உயர்கல்வி அமைச்சுடன் கைகோர்த்துள்ள நிறுவனம் எது?
  **சிங்கர்**

- ❒ Asian Banker இடமிருந்து இரட்டை விருதுகளைப் பெற்றுக்கொண்ட வங்கி எது?
  **சம்பத் வங்கி**

- ❒ இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்து சென்ற (14.06.2016) துருக்கி நாட்டின் அமைச்சர் யார்?
  **மெவுலூட் கவுசொகுலு**

- ❒ மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) முன்னாள் தலைவர் (15.05.2016) காலமானார். அவர் யார்?
  **சோமவன்ச அமரசிங்க (வயது-73)**
  இதேவேளை சிரேஷ்ட அரசியல்வாதியும், முன்னாள் ஆளுநருமான **அஸ்ஸெயித் அலவி மௌலானா** (வயது-85) (15.06.2016) காலமானார்.

- ❒ அரசாங்கத்தினால் அண்மையில் (22.06.2016) எப்பொருட்களுக்கு வற் வரி நீக்கப்பட்டுள்ளது?
  - **மருத்துவ பரிசோதனைகள்**
  - **மருத்துவக் கட்டணங்கள்**
  - **மருத்துவ ஆலோசனைக் கட்டணங்கள்**
  - **மருந்து வகைகள்**

- ❒ ஐரோப்பிய ஒன்றியத்தினால் மீனவத்தடை நீக்கப்பட்ட நாடு எது?
  **இலங்கை**
  இதன் மூலம் இலங்கை சர்வதேச நாடுகளுக்கு மீன்களை ஏற்றுமதி செய்யும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

## இலங்கையில் இன்று இவர்கள்...

- வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுக்கான ஆலோசகராக நியமனம் பெற்றவர் யார்?
  **ஹரீம் பீரிஸ்**

- தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகமாக அண்மையில் (06.06.2016) நியமனம் பெற்றவர் யார்?
  **கலாநிதி ரங்க கலன்சூரிய**
  இவர் சர்வதேச ஊடக நிறுவனத்தின் ஆசிய பிராந்தியத்துக்கான ஆலோசகராகவும் செயற்பட்டு வருகிறார்.

- தொலைத்தொடர்பு மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சர் யார்?
  **ஹரின் பெர்னாண்டோ**

- இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் யார்? **அதுல் கேஷாப்**

## உலகை நோக்கிய இம்மாத வலை வீசலில்...

- தற்போது மத்திய கிழக்கு நாடுகளில் பரவி வரும் சரும நோய் எது?
  **சருமத்தில் உள்ள ஒட்டுண்ணி வகையான "லேயிஷ்மேனியாசிஸ்" என்னும் இந்த நோய் மணல்ஈ கடிப்பதன் மூலம் இரத்தத்தில் தாக்கத்தைச் செலுத்தி நோயை ஏற்படுத்துகின்றது.**

- உலகளவில் 45 மில்லியன் மக்கள் இன்னமும் அடிமைகளாக வாழ்கின்றனர். அந்த வகையில், அடிமைகளைக் கொண்ட நாடுகளில் முதலிடம் பிடித்துள்ள நாடு எது?
  **இந்தியா**
  18.35 மில்லியன் மக்கள் இந்தியாவில் அடிமைகளாக வாழ்ந்து வருகின்றனர்.
  இங்கு அடிமை என்பது, தனிநபர் ஒருவர் அச்சுறுத்தப்பட்டோ, வன்முறைக் குட்படுத்தப்பட்டோ, வற்புறுத்தலுக்குட்பட்டோ, அதிகாரத் துஷ்பிரயோகத் திற்குட்பட்டோ இருப்பின் அது அடிமை எனப்பொருள்படும்.

- சர்வதேச அளவில் நீண்ட நேரம் நோன்பு பிடிக்கும் நாடுகளில் முதலிடம் பிடித்துள்ள நாடு எது? டென்மார்க்

◇ உலகில் மிக நீண்ட சுரங்கப்பாதை அண்மையில் (22.06.2016) எந்த நாட்டில் திறந்து வைக்கப்பட்டது? **சுவிஸில்**
இந்தப்பாதை ஐரோப்பாவை ஊடறுத்து வடிவமைக்கப்பட்டுள்ளது.

◇ 2015 ஆம் ஆண்டை அடிப்படையாக வைத்து வெளியிடப்பட்ட பட்டியலில்- உலகின் சிறந்த நாடுகளின் பட்டியலில் முதலிடம் பிடித்த நாடு எது?
**சுவீடன்**
தொடர்ந்து முறையே 10 இடங்களையும் டென்மார்க், நெதர்லாந்து, இங்கிலாந்து, ஜேர்மனி, பின்லாந்து, கனடா, பிரான்ஸ், ஆஸ்திரியா மற்றும் நியூஸிலாந்து இடம்பிடித்துள்ளன.
இதேவேளை, இலங்கை 85 ஆவது இடத்தையும், இந்தியா 70 ஆவது இடத்தையும் பெற்றுக்கொண்டன.
கலாசாரம், விஞ்ஞான வளர்ச்சி, சமாதானமும் பாதுகாப்பும், காலநிலை மாற்றம், சுகாதாரம் மற்றும் சமத்துவம் போன்றவை பிரதான குறிகளாக ஆராயப்பட்டன.
2014 ஆம் ஆண்டுக்கான பட்டியலில் அயர்லாந்து முதலிடத்தைப் பெற்றுக் கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

◇ அண்மையில் (12.06.2016) இரவு விடுதியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 50 பேர் சாவடைந்த துயரச் சம்பவம் எந்த நாட்டில் நடைபெற்றது?
**அமெரிக்கா (புளோறிடா மாகாணத்தின் ஓர்லாண்டோ பகுதியில்)**

◇ சிகரெட் புகைத்துவிட்டு அதனைச் சாலையில் வீசும் நபர்களுக்கு 100 பிராங் அபராதம் விதிக்கும் நடவடிக்கையைத் தொடங்கியுள்ள நாடு எது?
**சுவிட்ஸர்லாந்து**

◇ பரீட்சை நடத்தப்படுவதால் சமூக வலைத்தளங்களுக்கு தற்போது தடை விதித்துள்ள நாடு எது?
**அல்ஜீரியா**
மேற்படி நாட்டில் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வுகள் இணையத்தளம் மூலமே நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

◇ ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து தற்போது வெளியேறியுள்ள நாடு எது?
**பிரிட்டன்**
பிரிட்டனில் நடத்தப்பட்ட மக்கள் கணக்கெடுப்பில் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலக வேண்டும் என மக்கள் தீர்ப்பளித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

◇ உலகின் மிகப்பெரிய அகதி முகாம் ஒன்று எதிர்வரும் 2016 நவம்பர் மாதம் மூடப்படவுள்ளது. அந்த அகதி முகாம் எங்கே உள்ளது?
**கென்யாவில் உள்ள டடாப் அகதி முகாம்**

◇ அனைவருக்கும் சம்பளம் கொடுப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்திய நாடு எது?
**சுவிட்சர்லாந்து**
இருந்தபோதும், அந்நாட்டு மக்கள் சர்வஜன வாக்கெடுப்பில் மேற்படி திட்டத்தை நிராகரித்துவிட்டனர்.

◇ வொஷிங்டனை மையமாகக் கொண்ட பிராந்திய அமைப்பான அமெரிக்க நாடுகளின் அமைப்பில் (ஐ.ஓ.எஸ்.) தாம் ஒருபோதும் இணையப்போவது இல்லை என்று கூறிய நாடு எது?
**கியூபா**

◇ அண்மையில் மெக்ஸிகோ சென்றுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை அந்நாட்டு அதிபர் தனது காரில் சைவ உணவு விடுதிக்கு அழைத்துச் சென்றார். அந்த அதிபர் யார்?
**என்ரிக் பெனா நியடோ**

◇ உலகில் அதிக வருமானம் பெறும் வீரர்களின் பட்டியலை அண்மையில் "போர்பஸ்" பத்திரிகை வெளியிட்டது. இதில் முதலிடம் பெற்ற வீரர் யார்?
**கிறிஸ்டியானோ ரொனால்டோ (போர்த்துக்கல்)**
**முறையே மெர்ஸி (பார்ஸிலோனா), ரோஜர் பெடரர் இடம் பிடித்துள்ளனர்.**

◇ உலகில் எத்தனை வீதமானோர் ஒளி மாசால் பாதிக்கப்பட்டுள்ளதாக புதிய ஆய்வு கூறுகிறது?
**80 வீதம்**

◇ பாடசாலைக் கல்வி விடயம் குறித்து யுனிசெப் நிறுவனம் வெளியிட்டுள்ள விடயம் என்ன?
**உலகில் 7 கோடி 50 இலட்சம் பிள்ளைகளுக்கு பாடசாலைக் கல்வி கிடைக்காமல் போயுள்ளது.**

◇ உலகில் எத்தனை பேருக்கு ஒருவர் அகதிகளாக இருப்பதாக ஐ.நா. சபை குறிப்பிட்டுள்ளது?
**113 பேருக்கு ஒருவர்**

◇ சூரியனைச் சுற்றி வரும் சிறிய விண்கல் ஒன்று நாஸா கண்டுபிடித்துள்ளது. அந்த விண்கல்லின் பெயர் என்ன?
*2016 எச்.ஓ.3*

◇ உலகின் அதிவேகத் திறனுள்ள "சுப்பர் கம்பியூட்டர்" பட்டியலில் சீனாவின் புதிய கணினி முதலிடத்தைப் பிடித்துள்ளது. அக்கணினியின் பெயர் என்ன?
**சன்வே தாஹுலைட்**
நொடிக்கு 9300 கணக்கீடுகளைச் செய்ய முடியும்.

◇ என்.எஸ்.ஜி. எனப்படும் அணு சக்தி விநியோக நாடுகள் குழுமத்தில் இந்தியா சேர்வதற்கு ஆதரவு தெரிவித்துள்ள நாடு எது?
**அமெரிக்கா**

◇ ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாடு எங்கே நடைபெற்றது?
**உஸ்பெகிஸ்தான் நாட்டின் தலைநகரான தாஷ்கண்டில்** (23,24-06-2016)
**இந்தியா சார்பில் பிரதமர் நரேந்திர மோடி பங்குபற்றினார்.**

◇ சிகா வைரஸ் காரணமாக எந்த நாட்டில் கருக்கலைப்புச் செய்யும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது?
**லத்தீன் அமெரிக்காவில்**

◇ உலகின் மிகவும் நீளமானதும், ஆழமானதுமான சுரங்க புகையிரதப் பாதை எங்கே திறந்து வைக்கப்பட்டுள்ளது? **சுவிட்சர்லாந்து.**
கொத்தார்ட் பிராந்தியத்தை அடிப்படையாகக் கொண்ட 57 கிலோ மீற்றர் நீளமான சுரங்கப்பாதையானது சுவிட்சர்லாந்தின் அல்ப்ஸ் பிராந்தியத்துக்கும், தென் ஐரோப்பாவுக்கும் இணைப்பை ஏற்படுத்தும் வகையில் நிர்மானிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை, இதுவரை காலமும் உலகில மிக நீளமான சுரங்கப்பாதையாக ஜப்பானிலுள்ள 53.9 கிலோ மீற்றர் நீளமான செக்கன் சுரங்கப் பாதையே விளங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

◇ உலகப் புகழ்பெற்ற அதிபாரக் குத்துச்சண்டை வீரர் (04.06.2016) அண்மையில் அடுக்குவாத நோயால் பாதிக்கப்பட்டு மரணமடைந்தார். அந்த வீரர் யார்?
மொஹமட் அலி (வயது-74) (அமெரிக்கா)
இவர் மூன்று முறை அதிபார குத்துச் சண்டை சம்பியன் பட்டத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.
இவர் பெற்ற பட்டம் எது? ஹெலி லெயிட்

1967 ஆம் ஆண்டு நடைபெற்ற வியட்னாம் போரில் அமெரிக்கப் படையின ருக்கு எதிராகச் செயற்பட்டமையினாலேயே இவரது சம்பியன் பட்டம் பறிக் கப்பட்டது.

◇ அவுஸ்ரேலியாவில் எப்பகுதியில் அண்மையில் (05.06.2016) புயல் தாக்கி சேதத்தை ஏற்படுத்தியது?
**சிட்னி உள்ளடங்கலாக கடற்கரையோரப் பிரதேசங்கள்**

◇ தனது நாட்டில் போதைவஸ்து வியாபாரிகளை சுட்டுக்கொல்ல பொதுமக் களை ஊக்கப்படுத்தி வரும் பிலிப்பைன்ஸின் ஜனாதிபதி யார்?
**ரொட்றிக்கோ டுடெர்ட்**
இவர் கடும் போக்காளர் என்று பேசப்பட்டு வந்தவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

◇ உலகிலேயே பொலித்தீன் பாவனை மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களைக் கடலில் வீசும் நாடுகளில் எந்த நாடு முதலிடத்தில் உள்ளது?
**இலங்கை**

◇ ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் எத்தனையாவது கூட்டத் தொடர் (13.06.2016) ஜெனீவாவில் ஆரம்பமானது?
**32 ஆவது**

◇ சீனாவிற்குச் சென்ற ஜேர்மனி அதிபருக்கு கலாநிதிப் பட்டம் வழங்கப் பட்டது. அந்த அதிபர் யார்?
**ஜெலா மெர்கல்**

◇ உலகின் மிகப்பெரிய ஏவுகணை அண்மையில் அமெரிக்காவால் ஏவப்பட் டது. அந்த ஏவுகணையின் பெயர் என்ன?
**டெல்ற்றா - IV**

◇ அண்மையில் (17.06.2016) கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட பிரித்தானிய பாராளுமன்ற எதிர்க்கட்சி பெண் உறுப்பினர் யார்?
**ஜோ கொக்ஸே (வயது-41)**

◇ உலகெங்கும் மோதல் காரணமாக எத்தனை மில்லியன் மக்கள் இடம்பெயர்ந் துள்ளதாக ஐ.நா. அகதிகள் முகவர் நிலையம் தெரிவித்துள்ளது?
**65.3 மில்லியன்**

◇ சமுத்திரங்களில் மிதக்கும் பாரிய பனிப்பாறைகளை உடைத்து அகற்றுவதற் காக அணு சக்தியால் செயற்படும் உலகின் மிகப்பெரிய கப்பலை ரஷ்யா அறிமுகம் செய்துள்ளது. அந்தக் கப்பலின் பெயர் என்ன?
அர்க்திகா
586 அடி நீளம், 100 அடி அகலம் கொண்டது.
"22220 திட்டம்" எனற் நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு அங்கமெனக் ரஷ்யா கூறியுள்ளது.

## உலகின் இன்றைய நிலையில் இவர்கள்...

◎ ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் யார்?
டொனால்ட் ரஸ்க்
28 நாடுகள் அங்கம் வகித்தன. தற்போது 27 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

◎ கியூபா நாட்டின் ஜனாதிபதி யார்? ராவுல் காஸ்ட்ரோ

◎ பனாமா நாட்டின் ஜனாதிபதி யார்? ஜுவான் காலொஸ் வரெலா

◎ ஜேர்மன் நாட்டின் அதிபர் யார்? அஞ்ஜெலா மெர்கல்

◎ இத்தாலி நாட்டின் பிரதமர் யார்? மற்றியோ ரென்ஸி

◎ ஐ.நா. சபையின் நிலைமாற்று நீதி மற்றும் நல்லிணக்கம் தொடர்பான விசேட அறிக்கையாளர் யார்?
பப்ளோ டி கிரிப்
ஐ.நா. சபையின் மனித உரிமை பேரணியின் 32 ஆவது கூட்டத்தொடர் தொடர்பாக இலங்கை (13.06.2016) வந்து சென்றமை குறிப்பிடத்தக்கது.

◎ சுவிட்சர்லாந்து நாட்டின் ஜனாதிபதி யார்? ஜொகான் நிக்கலஸ்

◎ ஐ.நா.பொதுச்சபையின் முன்னாள் தலைவர் யார்? ஜோன் அஷி

## விளையாட்டுப் பக்கம் நோக்கிய வலை வீசலில்...

⊙ கிரான்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அத்தனை கிண்ணங்களையும் வென்றவர் என்ற சாதனையைப் படைத்த வீரர் யார்?
ஜோகோவிச்

- இலங்கை அணியின் முன்னாள் தலைவர் சனத் ஜெயசூரியாவுக்கு வாழ்நாள் உறுப்பினர் அந்தஸ்து வழங்கிக் கௌரவித்த இங்கிலாந்தின் முக்கிய கிரிக்கெட் விளையாட்டுக் கழகம் எது?
  **இங்கிலாந்தின் மெரிலெபோன் கிரிக்கெட் கழகம்**

- நடப்பு வருடத்துக்கான உதைபந்தாட்ட கோப்பா அமெரிக்கத் தொடரில் ஆர்ஜென்ரினாவை வீழ்த்தி மீண்டும் சம்பியனாகிய நாடு எது?
  **சிலி**
  இதேவேளை, ஆர்ஜென்ரினாவின் அதிர்ச்சித் தோல்வியைத் தொடர்ந்து அணியின் தலைவரான மெஸ்ஸி பன்னாட்டு ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

- இலங்கை கிரிக்கெட் வேகப்பந்து வீச்சாளர் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக அறிவித்துள்ளார். அந்த வீரர் யார்?
  **நுவன் குலசேகர**

- 2020 ஆம் ஆண்டில் டோக்கியோவில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் போட்டிகளில் புதிதாக சேர்க்கப்படவுள்ள விளையாட்டுக்கள் எவை?
  **பேஸ்போல், கராத்தே, மலை ஏறுதல், அலைச்சறுக்கு உட்பட 18 விளை யாட்டுக்கள் உள்ளடக்கப்படவுள்ளன.**
  அத்துடன் 474 புதிய போட்டியாளர்களும் பங்குபற்றவுள்ளனர்.

- பிரெஞ்ச் ஓபனில் முதன் முறையாகப் பட்டம் வென்றிருக்கும் ஜோகோவிச் ஆஸி ஓபன், பிரெஞ் ஓபன், விம்பிள்டன், அமெரிக்க ஓபன் ஆகிய நான்கு கிராண்ட்லாம்களையும் வென்ற 8 ஆவது வீரர் என்ற பெருமையைப் பெற்ற வீரர் யார்?
  **ஜோகோவிச் (செர்பியா)**

- ஊக்கமருந்து சர்ச்சையில் சிக்கிய ரஷ்ய ரென்னிஸ் வீராங்கனை மரிய ஷரபோவாவுக்கு எத்தனை ஆண்டுகள் போட்டித் தடை விதிக்கப்பட்டுள்ளது? **2 வருடம் (2016 ஜனவரி 26 முதல்..)**

- இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஒருவருக்கு சர்வ தேசப் போட்டிகளில் பந்து வீசுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்த வீரர் யார்?
  **சமிந்த எரங்க (வயது-29)**
  **சர்வதேச போட்டி விதிகளுக்கு இவரது பந்து வீச்சு முரணாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

- ⊙ ரென்னிஸ் போட்டிகளில் ஒற்றையர் பட்டத்தை 5 ஆவது முறையாகவும் வென்ற விரர் என்ற பெருமையைப் பெற்றுள்ள வீரர் யார்?
  **அன்டிமுர்ரே**

- ⊙ "மனித உலகக் கிண்ணம்" என்று அழைக்கப்படும் 7 ஆவது சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் போட்டி கடைசியாக எங்கே நடைபெற்றது?
  **2013 இல் இங்கிலாந்தில் நடைபெற்றது.**
  இதேவேளை, 8 ஆவது மினி உலகக் கிண்ணப் போட்டி 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 18 வரை நடைபெறவுள்ளது.

- ⊙ ஆசிய வலைப்பந்தாட்ட வல்லவர் போட்டி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் எந்த நாட்டில் நடைபெறவுள்ளது?
  **தாய்லாந்து**

- ⊙ 2016 ஆம் ஆண்டுக்கான 130 ஆவது விம்பிள்டன் ரென்னிஸ் போட்டி எங்கு நடைபெறவுள்ளது?
  **லண்டனில்**
  இப்போட்டி 2016 யூன்-27 - யூலை 10 வரை நடைபெறவுள்ளது. இவ் விளையாட்டு வெண்மையின் அடையாளமாகவும் கருதப்படுகின்றது.

## அயல்நாட்டுப் பக்கம் நோக்கிய வலை வீசலில்...

- ✧ தமிழகத்தில் 15 ஆவது சட்ட மன்றத்தின் புதிய எதிர்க்கட்சித் தலைவர் யார்?
  **மு.க.ஸ்டாலின்**

- ✧ இந்தியா தனது பிரம்மோஸ் (Brahmos) ஏவுகணையை எந்த நாடுகளுக்கு விற்பதற்கு தீர்மானித்து வருகிறது?
  **வியட்நாம், இந்தோனேசியா, தென்னாபிரிக்கா, சிலி, பிரேசில்**

- ✧ 20 செயற்கைக் கோள்களுடன் இஸ்ரோவினால் விண்ணில் ஏவப்பட்ட ரொக்கெட் எது?
  **சி-34**

- ✧ தொடர்ந்து 69 மணி நேரம் யோகாசனம் செய்து கின்னஸ் சாதனை நிகழ்த்திய தமிழகத்தின் யோகா ஆசிரியர் யார்? **குணசேகரம்**

✧ அணுசக்தி விநியோகக் குழுவில் இணையும் இந்தியாவின் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள நாடு எது?
**சுவிட்சர்லாந்து**
48 நாடுகளைக் கொண்ட மேற்படி குழுவின் என்.எஸ்.ஜி. என்னும் அணு சக்தி நாடுகள் குழுமத்தின் பேரவைக் கூட்டம் தென்கொரியாவின் தலைநகர் சியோலில் நடைபெற்ற போது சுவிஸ் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

✧ ரஜனிக்காந் நடித்து வெளிவர இருக்கும் "கபாலி" திரைப்படம் முதன் முதலாக பாரிஸ் நகரில் உள்ள திரையரங்கில் காட்சிப்படுத்தப்படவுள்ளது.. அத்திரையரங்கின் பெயர் என்ன?
**லீ கிராண்ட் ரெக்ஸ் (Le Grand Res)**
ஐரோப்பிய நாடுகளில் உள்ள திரையரங்குகளில் இதுதான் மிகவும் பெரியது. 2 ஆயிரத்து 200 பேர் அமர்ந்து பார்வையிட முடியும்.

✧ பயங்கர வெடிவிபத்தில் 2 அதிகாரிகள் உட்பட 20 இராணுவ வீரர்கள் உயிரிழந்த சம்பவம் (31.06.2016) அண்மையில் எங்கு நடைபெற்றது?
**இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள நாசிக் என்னுமிடத்தில்**

✧ நடிகரும், இயக்குநருமான ஒருவர் (03.06.2016) அண்மையில் மாரடைப்பால் காலமானார். அவர் யார்?
**பாலு ஆனந்த்**

✧ அண்மையில் (16.06.2016) காலமாகிய பழம்பெரும் இயக்குநர் யார்?
**ஏ.சி.திருலோகசந்தர் (வயது-87)**

✧ "மங்கை சூதகமானால் கங்கையில் மூழ்கலாம் கங்கையே சூதகமானால் எங்கே மூழ்குவது" என்ற கருத்தை வெளியிட்ட இந்தியாவின் பழம்பெரும் அரசியல்வாதி யார்?
**கலைஞர் மு.கருணாநிதி**

✧ இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி அமெரிக்க ஜனாதிபதி போல அதி நவீன வசதி கொண்ட விமானத்தில்தான் இனிமேல் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளவுள்ளார். அந்த விமானத்தின் பெயர் என்ன?
**ஏர் இந்தியா வன்**
இவர் பதவியேற்று இரண்டு வருடங்களில் 40 நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

✧ ஐ.நா. சபையின் நட்புறவு அமைப்பு விருது கிடைக்கப்பெற்ற இலங்கை Cive2 Lanka நிறுவனத்தின் தலைவர் யார்?
**துலான் டி சில்வா**
இவ்விருது அண்மையில் சபாநாயகர் கரு ஜெயசூரியாவினால் கொழும்பில் நடைபெற்ற வைபவமொன்றில் வைத்து வழங்கப்பட்டது.
மேற்படி இவர் செய்த சமூகசேவைக்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

✧ இலங்கை தமிழ் மாணவன் ஒருவருக்கு கனேடிய கெடட் விருதுகளில் அதிய உயர் விருதாகக் கருதப்படும் Lord Strathcona Award விருதைப் பெற்ற இலங்கை தமிழ் மாணவன் யார்?
**அமோஸ் டன்ஸ்டன்**

✧ ஹொங்கொங் Finance Asia நிதியியல் சஞ்சிகையினால் கொமர்ஷல் வங்கிக்கு வழங்கப்பட்ட விருது எது?
**2016 இல் இலங்கையில் அதிசிறந்த வங்கி**
20 வருட அதி சிறந்த செயற்பாடுகளுக்கான வங்கி என்பதற்கான பிளாட்டினம் விருதையும் வழங்கியுள்ளது.

✧ Asian Banker இடமிருந்து இரட்டை விருதுகளைப் பெற்றுக்கொண்ட வங்கி எது?
**சம்பத் வங்கி**

✧ தென்னிந்திய ஃபிலிம்பேர் விருது விழாவில் சிறந்த தமிழ் படம் என விருது பெற்ற திரைப்படம் எது?
**காக்கா முட்டை**
இதேவேளை, தெலுங்கில் சிறந்த திரைப்படம் : பாகுபலி

## அழகுராணிகள் பக்கம் நோக்கிய வலை வீசலில்...

⊙ 2016 ஆம் ஆண்டுக்கான அமெரிக்க அழகுராணியாகத் தெரிவு செய்யப்பட்ட அழகி யார்?
**தெஷோனா பார்பர் (வயது-26) (கொலம்பியா)**
இவர் அமெரிக்க இராணுவத்தில் இராணுவ திட்டச் செயல் அமுலாக்கல் கட்டளைத் தளபதியாகப் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.
இரண்டாவது : செல்ஸி கார்டின் (ஹாவாய்)
மூன்றாவது : எமானி ஜோலன் டேலிஸீ (ஜோர்ஜியா)

# நான் கேட்டவை, அறிந்தவை, படித்தவை உங்களுக்காக...

- இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சேர விரும்பும் ஒருவர் க.பொ.த உயர்தர பொதுச் சாதாரண (Common General Test) பரீட்சையில் பெற வேண்டிய ஆகக்குறைந்த புள்ளி எத்தனை?
  *30 புள்ளிகள்*

- இலங்கையில் வற் வரி அதிகரிப்பின் பின்னர் ஒரு பைக்கட் சீமெந்தின் தற்போதைய விலை என்ன? *930/-*
  முன்னர் 870/- இற்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது 60/- ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

- எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி பிரேஸிலின் ரியோடி ஜெனிரோ நகரில் ஆரம்பமாகவுள்ள போட்டி எத்தனையாவது ஒலிம்பிக் போட்டி?
  *31 ஆவது*

- அண்மையில் வெளியிடப்பட்ட **"கண்டிச் சீமையிலே..."** என்ற நூலின் ஆசிரியர் யார்?
  **இரா.சடகோபன்**
  இவர் கவிஞரும், சமூக ஆய்வாளரும், பொழிபெயர்ப்பாளரும், சட்டத்தரணி யுமாவார்.

- இந்தியாவின் முதுபெரும் அரசியல்வாதி கருணாநிதிக்கு இப்போது (03.06.2016) எத்தனை வயது? *93 வயது*

- உலகில் முதன் முதலாக எத்தனையாம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையி னால் சமுத்திரங்களைப் பாதுகாக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது?
  *1992*

- இலங்கையில் அதிக பிரதேச செயலாளர் பிரிவுகளைக் கொண்ட மாவட்டம் எது? *குருநாகல்*

- இலங்கையில் தற்போதுள்ள சட்டப்பிரமாணங்களுக்கமைய கட்டாயக் கல்வி வயது என்ன? *5-16 வயது வரை*

- 1815.03 02 ஆம் திகதி மேற்கொள்ளளப்பட்ட கண்டி உடன்படிக்கையில் கையொப்பமிட்ட பிரித்தானிய ஆளுனர் யார்? *றொபேட்பிறவுண்றிக்*

- தற்போது சிம்பாவே என அழைக்கப்படும் நாட்டின் பழைய பெயர் என்ன? ரொடிசியா

- நுகர்வு, வறுமை மற்றும் பொதுநலம் பற்றிய ஆய்விற்காக 2015 ஆம் ஆண்டு பொருளாதாரத்திற்கான நோபல் பரிசினைப் பெற்றவர் யார்? **ஆங்கஸ் டீட்டன்** (Angus Deaton - Scotland)

- ஏப்ரல் 22 இல் சர்வதேச ரீதியில் அனுஷ்டிக்கப்பபடும் புவி தினத்தின் 2016 ஆம் ஆண்டின் தொனிப் பொருள் என்ன? 'பசுமை நகரம்'

- அரசியலமைப்பின் 19 ஆம் திருத்தச் சட்டத்தில் குறிப்பிட்டதன்படி இலங்கை பாராளுமன்றத்தின் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களின் எண் ணிக்கை எத்தனை? 30

- இலங்கை பல்கலைக்கழகங்களில் நியமிக்கப்பட்ட முதலாவது பெண் துணைவேந்தர் யார்? **வசந்தி அரசரட்ணம்**

- இலங்கை சர்வதேச நாணய நிதியத்தில் அங்கத்துவம் பெற்ற ஆண்டு எது. 1950

- கடந்த பெப்ரவரி மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய சாரணர் ஜம்போறியம் எத்தனையாவது சாரணர் ஜம்போறியம்? 100 ஆவது

- உலகின் சிறந்த தந்தை விருது பெற்ற அமெரிக்கர் யார்? ஜோஸ் மார்ஷல் (வயது-28)

---

## ❑ அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் :




உலகின் மாபெரும் வல்லரசான அமெரிக்காவில், 2017 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி புதிய அதிபர் பொறுப்பேற்கப் போகிறார் இந்த அதிபர் எப்படி தேர்வு செய்யப்படுகிறார் என்பதைத் தெரிந்து கொள்வோம். பூமியின் மிகப்பெரிய இராணுவத்தின் தலைவர், உலகின் எந்தப் பகுதியிலும் நேரடியா கவோ, மறைமுகமாக அதிகாரம் கொண்டவர் அமெரிக்காவின் அதிபர்.

இந்தப் பதவிக்கு போட்டியிட வேண்டுமனில் அமெரிக்காவில் பிறந்திருக்க வேண்டும். குறைந்த பட்சம் 14 ஆண்டுகள் நாட்டில் வசித்திருக்க வேண்டும். சட்டப்பூர்மான தகுதிகள் இவை மட்டுமே. ஆனால் நடப்பில் வேறு சில தகுதிகளும் தேவைப்படுகின்றன.

கடந்த 90 ஆண்டுகளில் ஆளுநர், செனட் அவை உறுப்பினர், அல்லது இராணுவத் தளபதி என உயர் பதவிகளை வகித்தவர்கள் மட்டுமே அதிபர்களாக முடிந்திருக்கிறது. இந்த ஆண்டு நடக்கப்போகும் தேர்தலுக்கான களத்தையும் 10 ஆளுநர்கள், 10 செனட் உறுப்பினர்கள் என அதிகார வர்க்கமே ஆக்கிரமித்திருக்கிறது.

அமெரிக்காவின் அரசியல் நடைமுறைப்படி குடியரசு மற்றும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர்கள் மட்டுமே அதிபராக முடியும். இந்த வேட்பாளர்களைத் தேர்வு செய்யும் நடைமுறையானது தேர்தல் நடப்பதற்கு ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கி விடுகிறது.

ஒவ்வொரு கட்சியில் இருந்தும் பலர் தேர்தலில் பேட்டியிடுவதற்கு விருப்பம் தெரிவித்திருப்பதால், அவர்களில் யார் போட்டியிடுவது என்பதைத் தீர்மானிப்பதற்காக ஒவ்வொரு மாநிலத்திலும் தனித்தனியாக வேட்பாளர்களைத் தேர்வு செய்வதற்கான தேர்தல்கள் நடக்கின்றன. சுமார் 40 ஆண்டுகளாக அயோவா மாநிலத்திலேயே இந்தத் தேர்தல்கள் தொடங்குகின்றன.

இரண்டாவதாக நியூ ஹம்ஷயார் மாநிலத்தில் தேர்தல்கள் நடக்கின்றன. அதிபர் பராக் ஒபாமா தொடர்ந்து இரண்டு முறை பதவி வகித்து விட்டதால் இந்த ஆண்டு நடக்கும் தேர்தலில் அவர் போட்டியிட முடியாது.

தற்போதைய நிலையில், ஜனநாயகக் கட்சி சார்பில் முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டனும், தொலைக்காட்சி பிரபலம் டொனால்ட் ட்ரம்ப் களத்தில் முதன்மையாக இருக்கின்றனர்.

ஒரு கட்சி சார்பில் ஒருவர் மட்டுமே அதிபருக்கான தேர்தலில் போட்டியிடப்போகிறார்கள். அதனால் இவர்களில் ஒருவரைத் தேர்வு செய்வதற்கான தேர்தல்கள் தற்போது களைகட்டியுள்ள நிலையில் முடிவுக்கு வரவுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்படுவதற்கு ஆயிரத்து 237 வாக்குகளுக்கு மேல் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஹிலாரி கிளின்டன், டொனால்ட் டிரம்ப் உட்பட பின்வருவோர் போட்டியிடுகின்றனர். டெட் குரூஸ், ஜெப் புஷ் பெர்னி சாண்டர்ஸ் ஆகியோராவார்.


தற்போதைய கள நிலவரப்படி ஹிலாறி கிளின்ரன் முன்னிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்காவில் ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

---

**உங்கள் பார்வையில் வலை...**

வலை குறித்து உங்களது கருத்துக்களை எழுதி, Passport அளவு புகைப்படத்தினையும் இணைத்து அனுப்புங்கள். அவை காலக்கிரமத்தில் வலையில் பிரசுரிக்கப்படும்.

## ❒ 2022 இல் விண்வெளியில் சீன ஆய்வு கூடம்!



விண்வெளியில் சீனா உருவாக்கி வரும் ஆய்வுக் கூடம் எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு முதல்செயல் படத் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக விண்வெளி சென்று பூமி திரும்பக்கூடிய விண்கலச் சோதனையை சீனா வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பிய யூனியன் ஆகியவை இணைந்து விண் வெளியில் சர்வதேச ஆய்வுக் கூடத்தை அமைத்துள்ளன. அந்த ஆய்வுக் கூடத்துக்கு விண்வெளி வீரர்களுடன் அமெரிக்க, ரஷ்ய விண்கலன்கள் சென்று திரும்பி வருகின்றன.

இதேபோல சீன விண்வெளி ஆய்வு நிறுவனம் சார்பில் "தியான் கோங்" என்ற பெயரில் விண்வெளியில் தனியாக ஆய்வுக் கூடம் அமைக்கப்பட்டு வருகிறது.






விரைவில் நடைபெறவுள்ள கிராம அலுவலர் போட்டிப் பரீட்சை, வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் (சமுர்த்தி) போட்டிப் பரீட்சை போன்றவற்றை முன்னிட்டு வீசப்பட்ட வலையின் விசேட வெளியீடு வெளிவந்து விற்பனையாகிறது...

விலை : 300/- மட்டுமே

வாங்கிப் படியுங்கள்,
வித்தியாசத்தை உணர்வீர்கள்...

விலை : 350/- மட்டுமே

யாழ்.நகரில் பூபாலசிங்கம் புத்தகசாலையில் பெற்றுக்கொள்ள முடியும்


## மாணவனின் பார்வையில்...



இன்று தேடல் என்பது, எல்லோருக்கும் வசதி வாய்ப்பானதாக அமைந்து விடுவதில்லை. இன்றைய உலகம் விஞ்ஞான வளர்ச்சியில் விரிந்தும், உருவில் சுருங்கியும் காணப்படும் நிலையில், தேடல் என்பது இன்றியமையாததொன்றாகி விடுகின்றது.

சந்தையில் எவ்வாறான பொது அறிவுத் தொகுப்புக்கள் வந்தாலும், அவை பணம் சம்பாதிக்கும் நோக்கோடு வெளியிடப்படுவதை அவதானிக்க முடிகிறது. ஆனால் இவ் 'வலை'ச் சிற்றிதழை நோக்கும் போது பொதுநலனும், சேவை நோக்கமும் கொண்டதாகவே தெரிகிறது.

நூலகங்களுக்குச் சென்று கற்பதற்கு நேரமில்லை எனக்கூறும் எமது சமுதாயத்திற்கு காலத்தின் தேவை அறிந்து கைக்கு அடக்கமான முறையில் அளவான பக்கங்களுடன் சிறிய இதழாக வெளிவருவது இதன் சிறப்பம்சமாகும்.

பாடசாலை மாணவர்கள், அரச போட்டிப் பரீட்சார்த்திகள் தமது பொது அறிவின் நிமித்தம் கற்பதற்கு இதைவிட வேறு என்ன வேண்டும்? எனவே இவ்வாறான முயற்சியைப் பாராட்டாமல் இருக்க முடியாது எனக்கூறி, வலை தொடர்ந்து பின்னப்பட வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

திரு.ச.கேதீஸ்வரன்,
IELTS மாணவன்,
பெரியவிளான்.



தொடர்புக்கு : சி.என்.எச்.சாள்ஸ், 163 செம்மணி வீதி, நல்லூர். தொ.இல : 0776913337
heyncharles@gmail.com